# அக்டோபர் – 24 – புதன்

**புனித அந்தோனி மரிய கிளாரட்**

**“நீங்களும் ஆயத்தமாக இருங்கள் ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார்” (லூக். 12:40)**

## முதல் வாசகம் : ஏபேசியர் 3 : 2 – 12

சகோதர சகோதரிகளே! உங்கள் நலனுக்காகக் கடவுளின் அருளால் எனக்களிக்கப்பட்ட பொறுப்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன்.அந்த மறைபொருள் எனக்கு இறை வெளிப்பாட்டின் வழியாகவே தெரியப்படுத்தப்பட்டது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சுருக்கமாக உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.அதை நீங்கள் வாசிக்கும்போது, கிறிஸ்துவைப் பற்றிய மறைபொருளை நான் புரிந்து கொண்டேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.அந்த மறைபொருள் மற்ற தலைமுறைகளில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இப்போது தூய ஆவி வழியாகத் தூய திருத்தூதருக்கும் இறைவாக்கினருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைபொருள்.கடவுள் வல்லமையோடு என்னுள் செயல்பட்டு எனக்கு அளித்த அவரது அருள்கொடைக்கு ஏற்ப, அந்த நற்செய்தியின் தொண்டன் ஆனேன்.கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப்பற்றிய நற்செய்தியை பிற இனத்தாருக்கு அறிவிக்கவும், எல்லாவற்றையும் படைத்த கடவுளுக்குள் ஊழிகாலமாக மறைந்திருந்த இந்த மறைபொருளின் திட்டம் இன்னதென யாவருக்கும் தெளிவுபடுத்தவும், இறைமக்கள் அனைவருள்ளும் மிகவும் கடையவனாகிய எனக்கு இந்த அருள் வழங்கப்பட்டுள்ளது.அதன்மூலம் பலவகையில் விளங்கும் கடவுளின் ஞானத்தை ஆட்சிபுரிவோர், வான்வெளியில் அதிகாரம் செலுத்துவோர் ஆகியோருக்கு இப்போது திருச்சபை வழியாக வெளிப்படுத்த முடிகிறது.இவ்வாறு கடவுள் ஊழிகாலமாகக் கொண்டிருந்த திட்டத்தை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவழியாய் நிறைவேற்றினார்.கிறிஸ்துவின்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாகக் கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அணுகும் உரிமையும் துணிவும் நமக்குக் கிடைத்துள்ளது.

**பதில்பாடல் :** மீட்பளிக்கும் ஊற்றிலிருந்து அகமகிழ்வோடு முகந்து கொள்வீர்.

## நற்செய்தி : லூக்கா 12 : 39 - 48

அக்காலத்தில் இயேசு தமது சீடர்களை நோக்கிக் கூறியதாவது : எந்தநேரத்தில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாள ருக்குத் தெரிந்திருந்தால் அவர் தம்வீட்டில் கன்னமிடவிடமாட்டார் என்பதை அறிவீர்கள். நீங்களும் ஆயத்தமாய் இருங்கள் ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார்.“ அப்பொழுது பேதுரு, “ஆண்டவரே, நீர் சொல்லும் இந்த உவமை எங்களுக்கா? அல்லது எல்லாருக்குமா? “ என்று கேட்டார். அதற்கு ஆண்டவர் கூறியது: “தம் ஊழியருக்கு வேளாவேளை படியளக்கத் தலைவர் அமர்த்திய நம்பிக்கைக்கு உரியவரும் அறிவாளியுமான வீட்டுப்பொறுப்பாளர் யார்? தலைவர் வந்து பார்க்கும்போது தம் பணியைச் செய்துகொண்டிருப்பவரே அப்பணியாளர். அவர் பேறுபெற்றவர். அவரைத் தம் உடைமைக்கெல்லாம் அதிகாரியாக அவர் அமர்த்துவார் என உண்மையாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் அதே பணியாள் தன் தலைவர் வரக்காலந் தாழ்த்துவார் எனத்தன் உள்ளத்தில் சொல்லிக்கொண்டு ஆண், பெண் பணியாளர்கள் அனைவரையும் அடிக்கவும், மயக்கமுற உண்ணவும்இ குடிக்கவும் தொடங்கினான் எனில் அப்பணியாள் எதிர்பாராதநாளில், அறியாதநேரத்தில் அவனுடைய தலைவர் வந்து அவனைக் கொடுமையாகத் தண்டித்து நம்பிக்கைத் துரோகிகளுக்கு உரிய இடத்திற்குத் தள்ளுவார். தன் தலைவரின் விருப்பத்தை அறிந்திருந்தும் ஆயத்தமின்றியும், அவர் விருப்பப்படி செயல்படாமலும் இருக்கும் பணியாள் நன்றாய் அடிபடுவான். ஆனால் அவர் விருப்பத்தை அறியாமல் அடிவாங்கவேண்டிய முறையில் செயல்படுபவன் அவரது விருப்பத்தை அறியாமல் செயல்படுவதால் சிறிதே அடிபடுவான். மிகுதியாகக் கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாகவே எதிர்பார்க்கப்படும். மிகுதியாக ஒப்படைக்கப்படுபவரிடம் இன்னும் மிகுதியாகக் கேட்கப்படும்“ என்றார்.

**தியானம்:** நாம் எப்போதும் தயார் நிலையில் இருக்கவேண்டும் என்பதையும், நமது செயல்களுக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் நற்செய்தியில் இயேசு அழுத்தம் கொடுத்துக் கூறுகின்றார். குறிப்பாக இறைமகன் கிறிஸ்து தாம் விட்டுச் சென்ற பணியை பொறுப்புடனும், விழிப்புடனும் செயலாற்ற அவரது பணியாளர்களுக்கு அழைப்புவிடுக்கின்றார். இறையாட்சிப் பணியில் ஈடுபட்டுள்ளோரின் பயணம் சோகமும், சோர்வும் நிறைந்தபயணம். அது சுமை சுமந்து சோர்வுற்ற போதெல்லாம் இருகரம் விரித்து அரவணைக்கும் அன்பு தெய்வம் நம்மோடு இருக்கின்றார். நாம் விழிப்போடு இருக்கவேண்டும். காலத்தை வீணாக்கி இவ்வுலக இச்சைகளுக்கு இடங்கொடுத்து வாழ்ந்தால் நாம் வாழ்வை இழப்பது நிற்சயம். மாறாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணியை செவ்வனே செய்து நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் மனந்தளராது வாழும் பொழுது இயேசு இன்னும் தாராளமாக தமது பேரன்பை பொழியக் காத்திருக்கின்றார். நாம் விழிப்போடு இருப்போமா?